**5. அங்கதன் கதை**

மகத நாட்டிலே வாருணம் என்னும் நகரிலே அங்கதன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். இவன் இராயசிங்கன் என்னுங் குறுநில



மன்னனுக்குத் தம்பி. கல்வி யறிவிற் சிறந்து விளங்கிய இவன் திருமாலடிக்கே பெருமால் கொண்டு அப்பெருமாளையே நாளும் வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தான். இவனிடத்தில் அருமை மிக்க வயிரமணி ஒன்று இருந் தது. அம்மணியைச் சகநாதத்தில் எழுந்தருளிய பெருமா ளுக்கு அணிய வேண்டும் என்று விரும்பி யிருந்தான். இவனுடைய அண்ணன் அம்மணியைத் தனக்குத் தந்து விடும்படி இவனைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இவன் கொடுக்கவில்லை. அதனால் அவனுக்குக் கொடுஞ் சினம் உண்டாகியது. நஞ்சு கலந்த உணவைக் கொடுத்து இவனைக் கொன்று விடுமாறு ஒரு பெண்ணை ஏவினான். அவள் அவனுடைய விருப்பப்படி நஞ்சு கலந்த உணவை இவனிடம் தந்தாள். இவன் உண்ணத் தொடங் கினான். அந்தோ இவன் வீணே மாண்டொழியப் போகி றானே என்று உள்ளங் கலங்கிய அவள் உண்மையை இவனிடம் உரைத்துவிட்டாள். ஆயினும் இவன் அதனை மேற்கோள் விளக்கக் உண்ணாமல் இருக்கவில்லை. அண்ணன் எண்ணம் திண்ண மாக அவன் எண்ணிய வண்ணம் இனிது நிறைவேற வேண்டுமென்று அதனை உண்டான். ஆருயிர் போகவில்லை. நம்பிய கடவுளின் நல்லருளால் உயிர் பிழைத்தான். இதனையறிந்த அண்ணன் உள்ளம் நாணினான்.பகை யைவிட்டு உறவைக் கொண்டான். விரும்பத்தக்க நாகரி கத்தை வேண்டுபவர் நஞ்சிடக் கண்டாலும் உண்டு மகிழ் வர் என்பதனை உலகம் இவன்பால் கண்டது.

(நாகரிகம் விரும்புவோர்]